ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

श्रीकृष्णाखिललोकपालककृपासिन्धो भवच्छासना-
भिख्यानादिसुधर्मकल्पलतिकाप्रोन्मूलनायाधुना ।
केचित्सन्ति धृतोद्यमा इति भृशं जानन्नपि त्वं विभो
किं मौनं वहसे न चिन्तयसि किं गीतोदितं स्वं वचः ॥

𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌖𑌿𑌲𑌲𑍋𑌕𑌪𑌾𑌲𑌕𑌕𑍃𑌪𑌾𑌸𑌿𑌨𑍍𑌧𑍋 𑌭𑌵𑌚𑍍𑌛𑌾𑌸𑌨𑌾-
𑌭𑌿𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌦𑌿𑌸𑍁𑌧𑌰𑍍𑌮𑌕𑌲𑍍𑌪𑌲𑌤𑌿𑌕𑌾𑌪𑍍𑌰𑍋𑌨𑍍𑌮𑍂𑌲𑌨𑌾𑌯𑌾𑌧𑍁𑌨𑌾 ।
𑌕𑍇𑌚𑌿𑌤𑍍𑌸𑌨𑍍𑌤𑌿 𑌧𑍃𑌤𑍋𑌦𑍍𑌯𑌮𑌾 𑌇𑌤𑌿 𑌭𑍃𑌶𑌂 𑌜𑌾𑌨𑌨𑍍𑌨𑌪𑌿 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌭𑍋
𑌕𑌿𑌂 𑌮𑍌𑌨𑌂 𑌵𑌹𑌸𑍇 𑌨 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌸𑌿 𑌕𑌿𑌂 𑌗𑍀𑌤𑍋𑌦𑌿𑌤𑌂 𑌸𑍍𑌵𑌂 𑌵𑌚𑌃 ।

ஸகல லோகங்களையும் பாதுகாப்பவரும், கருணைக்கடலாயும், ஸகல ஐச்வர்யங்களுக்கும் இருப்பிடமாயும் விளங்கும் ஹே கிருஷ்ணபகவானே! உங்களுடைய உத்தரவென்று பிரஸித்தமாயிருக்கும் அநாதியான சிறந்த தர்மமென்கிற கற்பகக்கொடியை அடியோடு களைந்து பிடுங்கி எறியவேண்டுமென்று சிலர் பெரும்முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நீர் அறிந்தும் ஹே விபோ! எவ்விதக்காரியத்தையும் செய்யும் சக்தி வாய்ந்த பிரபோ! அறியாதவர்போல் மௌனத்தை யடைந்திருக்கிறீரே? இவ்விதம் நீர் இருப்பது உசிதமாகுமா? எந்த ஸமயத்தில் தர்மத்திற்குக் குறைவும், அதர்மத்திற்குவிருத்தியும், ஏற்படுகின்றதோ அப்பொழுது நான் அவதரித்து, தர்மத்தை நன்கு நிலைநாட்டி ஸாதுக்களையும் ரக்ஷிக்கிறேன் என்று கீதா சாஸ்திரத்தில் அர்ஜுனனிடம் செய்யப்பட்டிருக்கும் பிரதிக்ஞை இப்போது உமக்கு ஞாபகமில்லையா?

ஸநாதநதர்மத்தில் அபிமானம்கொண்ட ஒருபக்தன் பகவானிடம் ஹே கிருஷ்ணபரமாத்மாவே!

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥
धर्मसंस्थापनार्थञ्च संभवामि युगे युगे ।

𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥
𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌞𑍍𑌚 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇 ।

என்கிற இந்த வசனங்களால் உலகில் தர்மத்திற்குக் குறைவேற்படுங்கால் வந்து பாதுகாப்பதாக வாக்களித்ததற்கு இது சரியான ஸமயமாதலால் சீக்கிரம் அவதரித்து அதர்மத்தை விலக்கி தர்மத்தை நன்கு ஸ்தாபனம் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கின்றார்.

உபபத்திராதிபர்.

4-86

# ஆர்ய தர்மம்.

பிரபவஹு ஆவணி-மீ௳ ௧௬௨

## ஹரிஹராபேதம்.

केचिद्वदन्ति हरमेव परं रमेशादन्ये फणन्ति गिरिशात् परमेव विष्णुम् ।
भेदोऽनयोः प्रथितयोर्नचशास्त्रदृष्ट्येत्यावेद्यते सुजनतोषकृते मयाऽद्य ॥
கேசித்வதந்தி ஹரமேவ பரம் ரமேசாதந்யே பணந்தி கிரிசா
த்பரமேவ விஷ்ணும் பேதோऽநயோ: ப்ரதிதயோர்நசசாஸ்த்ர
த்ருஷ்ட்யேத்யாவேத்யதே ஸுஜநதோஷக்ருதே மயாऽத்ய ॥

சிலர் ஹரியைககாட்டிலும் ஹரர் என்கிற பரமசிவனைச் சிறந்தவரென்றும் மற்றும் சிலர் பரமசிவனைக்காட்டிலும் ஹரி என்கிற விஷ்ணுவைச் சிறந்தவரென்றும் கூறுகின்றார்கள்.

இவ்வித பேத வியவகாரத்தால் மனவருத்தத்துடன் கூடியிருக்கும் ஆஸ்திகர்களுக்கு ஸந்தோஷத்தையுண்டுபண்ணவேண்டி மிகவும் பிரஸித்திபெற்ற இவ்விரு தேவதைகளுக்கும சாஸ்திர ரீதியாய் பேதமே இல்லையென்று இங்கு நிரூபிககபபடுகிறது.

உலகில் மானிடராக ஜனித்தவர்கள் அவரவர்களும் தம்தம் சக்திக்கும் மனத்திலுள்ள அபிமானத்திற்கும் தக்கவாறு யாதாகிலுமோர் தேவதாமூர்த்தியிடம் பக்திசெய்து அதின் அனுக்கிரகத்தைப்பெற்று அதிலிருந்தும் ஸம்ஸாரதுக்கத்தைப் பூராவும் விலககி உத்தமமான மோக்ஷசுகத்தைப் பெறலாமேயன்றி வேறுவிதம் இந்தஸம்ஸாரதுக்கத்தை போக்கமுடியாதெனறு சாஸ்திரங்களின் உண்மைப்பொருளையறிந்த சான்றோர்கள் சாற்றுகின்றனர்.

இவ்விதமே பல மஹான்கள் நற்கதி பெற்றிருக்கிறார்கள் என்று தற்காலம் விளங்கும் சாஸ்திரங்களாலும் நனகு அறியலாம். இவ்விதமாராதிககப்படும் தேவதாமூர்த்திகள் பலவிருப்பினும் எந்த மூர்த்தியை யார் ஆராதனம் செய்தாலும் பக்தியுடன் செய்தால் அந்த மூர்த்தி அவனுடைய கோரிக்கையைப் பூர்த்தி செய்ய ஸித்தமாயிருக்கிறது. அவ்விதமூர்த்திகளுக்குள் சிவன் விஷ்ணு என்று திருநாமம் பூண்ட இரண்டு மூர்த்திகள் முக்கியமானவை. வைதிக மதத்தைப் பின்பற்றும் ஆஸ்திகர்களில் பெரும்பாலும் இவ்விருமூர்த்திகளில் ஒரு மூர்த்தியினிடம் பக்தி வாய்ந்தவர்களாகவே யிருப்பார்கள். அவ்விதமிருந்தாலும் பெரியோர்களாயிருப்பவர்கள் ஒரு மூர்த்தியில் தமக்கு பக்தியிருந்தா

னும் மற்றொரு மூர்த்தியைச் சிறிதென்றோ பெரிதென்றோ இகழ்ந்து பேசவோ முன் வரமாட்டார்கள். யாராகிலும் இவ்விதம் பேசினாலும் அதையும் சரியல்லவென்று கண்டிப்பார்கள். இவ்விதமிருப்பதுதான் உசிதம். இதுவே சாஸ்திரங்களின் அபிப்பிராயமாகும். இந்த உண்மையையறியாத சிலமூடர்கள் சிவன் விஷ்ணு இந்த இரண்டு மூர்த்திகளுக்குள் ஒருமூர்த்தியில் தமக்கு அதிக பக்தியிருப்பதாகக் கருதிக்கொண்டு மற்றொரு தேவதா மூர்த்தியை தூஷிக்க முன் வருகிறார்கள். இது மிகவும் தவறேயாகும். எந்த தேவதையிடம் எவ்வித மஹிமையிருக்கென்பதை இவர்கள் அற்பமாவது அறிந்திருப்பார்களா அநாதியாய் விளங்கும் சுருதிகூட நன்கு அறியமுடியாமல் அந்த ஸ்வரூபத்தை நிரூபிக்குமிடத்தில் பயந்து

अतद्व्यावृत्त्यायं चकितमभिधत्ते श्रुतिरपि ।

அதத்வ்யாவ்ருத்த்யாயம் சகிதமபிதத்தே ச்ருதிரபி ।

இதல்ல இதல்லவென்று மற்றுமுள்ள வஸ்துக்களை விலக்கிக் காட்டுகின்றது. சுருதிக்குக்கூட எட்டாத வஸ்துவைப் புகழவோ இகழவோ இவர்கள் எப்படி அதிகாரிகளாவார்கள். சாஸ்திரங்களுடைய தத்வார்த்தத்தைக் கவனித்தால் இந்த இரண்டு மூர்த்திகளும் ஒன்றுதான் வேறல்லவென்று நன்றாய்த் தெரிகின்றது. இந்த விஷயத்தில் தர்மபுத்திரர் சங்கைகொண்டு பீஷ்மரை வினவுங்கால் அவரால் கூறப்பட்ட ஒரு கதையும் ஞாபகத்திற்கு வருகிறபடியால் அதையும் சுருக்கமாக வெளியிடுகிறோம்.

தர்மபுத்திரர் ஸகலதேவர்களாலும் போற்றக்கூடிய மஹிமைபெற்ற ஸ்ரீ பரமேச்வாருடைய அடியார்களுக்கு எதுவும் சுலபம்தான். வைகுண்டத்தையோ, பிர்மலோகத்தையோ, அல்லது ஸ்வர்க்கத்தையோ எதையடையவிரும்பினாலும் அதைப்பெறலாம் என்று கூறும் பீஷ்மரிடம்

तेषामीश्वरभक्तानां विष्णुलोक: कथं भवेत् ।
एतं मे संशयं तात च्छेत्तुमर्हस्यशेषत: ॥

தேஷாமீச்வரபக்தாநாம் விஷ்ணுலோக: கதம் பவேத் ।
ஏதம் மே ஸம்சயம் தாத சேத்துமர்ஹஸ்யசேஷத: ॥

பரமேச்வர பக்தர்களுக்கு விஷ்ணுலோகமான வைகுண்டமானது எப்படிக் கிடைக்குமென்று எனக்கேற்பட்டிருக்கும் ஸந்தேஹத்தைத் தாங்கள் போக்கவேண்டுமென்று தர்மபுத்திரர் செய்த பிரார்த்தனையை அங்கீகரித்து பீஷ்மர் கூறுகின்றார். (தொடரும்)

உபபத்திராதிபர்.

# ஸந்தியாவந்தன விமரிசம்.

(423-வது பக்கத்தொடர்ச்சி)

பிராமணர்களுக்கு முக்கிய மந்திரம் காயத்ரீ.

**गायन्तं त्रायत इति गायत्री** காயந்தம் த்ராயத இதி காயத்ரீ

த்விஜன்மர்களான பிராமணர்களுக்கு மூன்றுகாலங்களிலும் அனுஷ்டிக்கக்கூடியதும் பிர்ம்மண்ணியத்திற்கு அறிகுறியான உபவீதத்திற்குப் பிரதிதினமும் எதிர்பாராமல் நேரிடும் அசுத்தங்களான ஸூராகந்தம் பாஷாண்ட ஸல்லாபங்கள் தாழ்ந்த வஸ்துக்களின் மத்தியில் போகும்படி நேரிடுதல்; முதலியவற்றால் குறைவு உண்டாகும்போது அதற்குத் தகுந்தபடி ஸங்கியையுடன் காயத்திரீயை ஜபித்து பரிசுத்தமாக்குவதும் இந்த காயத்திரீ ஜபமே,

இந்த மஹாமந்திரமானது உபநயனகாலத்தில் பரம ரகஸியமாய் ஆசாரியன், பிர்ம்மா, வடு, இம்மூவர்களுக்கு மட்டில் தெரியப் பெற்று உபதேசிக்கப்பட்டு வருவதை எல்லா தேசங்களிலும் ஸகல பிராமணர்களிடமும் காணலாம்.

இப்படிப்பட்ட ரகஸிய மந்திரமானது பிராமணர்களால் உபநயநகாலம் முதல் யாவஜ்ஜீவம் பலதடவைகளில் பிரதிதினமும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இதற்குப் பிரம்மோபதேசம் என்று கௌரவம் பொருந்திய திருநாமம் ரிக்கு, யஜூர், ஸாமசாகிகளான ஸகல பிராமணர்களும் உபாகர்மாவை தினபேதமாயும் மாஸ பேதங்களிலேயும் தங்கள் தங்கள் அனுஷ்டிக்கும் பஞ்சாங்கப் பிரகாரம் செய்து வந்தாலும் இந்த காயத்திரீமஹாமந்திர ஜபத்தை சிராவண கிருஷ்ணப் பிரதமைதிதியிலேயே பேதமின்றி அனுஷ்டித்து வருவதைப் பிரத்தியக்ஷமாகப் பார்க்கலாம். தவிரவும் வைதிகர்களுக்கு நேரிடும் நிமந்திரணத்திற்கு

आब्दिकेष्टशतंप्रोक्तं मासिकेतु च षट्शतम् ।
ऊने सहस्रं विज्ञेयं सापिण्डे त्रिसहस्रकम् ॥
देवार्थे द्विगुणं प्रोक्तं पित्रे तु त्रिगुणं भवेत् ।
निमित्ते द्वादशेचैव श्राद्धे त्रिंशत् सहस्रकम् ॥
प्रत्याब्दिके शतं प्रोक्तं एतद्गायत्रिलक्षणम् ।

ஆப்³தி³கே ஷட்ஶதம் ப்ரோக்தம் மாஸிகே து ஷட்ஶதம் ।
ஊனே ஸஹஸ்ரம் விஜ்ஞேயம் ஸாபிண்ட்³யே த்ரிஸஹஸ்ரகம் ॥
தை³வாத்³யே நவஶதம் ப்ரோக்தம் விப்ரேந்த்³ர த்ரிஶதம் ஸதே
நிஷித்³தே⁴ ஆத்மஶௌசேவ ப்ராயே த்ரிம்ஶத்ஸஹஸ்ரகம் ॥ [ச ।
ப்ரத்யாப்³தி³கே ஶதம் ப்ரோக்தம் ஜபேத்³கா³யத்ரிமக்ஷணம் ।

வருஷாப்தீகம், மாஸிகம், ஊனமாஸிகங்கள், ஸபிண்டீகரணத்தின் 4, 3, 2, 1 வர்ணங்கள். பிரதம சிரார்த்தம் ஸாதாரண சிரார்த்தம் இவைகளில் புஜித்தவன் முறையே எண்ணூறு, அறுநூ, ஆயிரம், மூவாயிரம், ஆறுயிரம், ஒன்பதினுயிரம், பன்னீராயிரம் முப்பதினுயிரம், நூறு, என்றும் சங்கியைப்படி இம்மந்திரத்தை ஜபித்துப் பழைய பிர்ம்மண்ணியத்தை அடைவதாக ஸ்மிருதிகளில் கூறியிருக்கிறது. பொய் என்பது பஞ்சமஹாபாபங்களில் ஒன்று அப்படியிருந்தும் கதியில்லாமல் ஐந்து ஸந்தர்ப்பங்களில் சொல்லும் அபத்தங்களுக்கு பாபம் கிடையாதென்று ஸ்மிருதி கர்த்தாக்களின் அபிப்பிராயம்.

அப்படிப்பட்ட பாபங்களுக்கு நிவர்த்தியாகவே சிராவண கிருஷ்ண பிரதமைதிதியில் லௌகிகப் பிரபுக்கள் உள்பட ஸகல பிராமணர்களும் வித்யாசமின்றி ஆயிரத்தெட்டுத் தடவை நியமத்துடன் இம்மஹாமந்திரத்தை ஜபித்து வருகிறுர்கள். மேலும் இந்த ஜபத்தின் மொத்த அக்ஷரங்கள் இருபத்தினன்கு இதன் ஒவ்வொரு அக்ஷரத்தையும் பிரதி ஆயிரம் சுலோகங்களுக்கு ஆரம்ப அக்ஷரமாக ஆதிகாவ்யகர்த்தாவாகிய ஸ்ரீ வால்மீகி மஹரிஷி தான் இயற்றிய ஸ்ரீமத்ராமாயண கிரந்தத்தில் உபயோகித்திருக்கிறுர். இதைப் பிரதிதினமும் வைதிகர்களும் ஆஸ்திகர்களும் ஜபித்துவரும் காயத்திரி ராமாயணத்தில் காணலாம். வேதங்களிலும் இருபத்தினன்கு அக்ஷரங்களுள்ளது காயத்திரீ என்றுசொல்லியிருக்கிறது. பிர்ம்மசிரஸ் என்னும் அஸ்திரத்தின் முக்கியதேவதையாணது. இந்த காயத்கிரியையே பிரதானமாயுள்ளது என்று அஸ்திரமந்திர சாஸ்திரத்தில் கூறியிருக்கிறது. இந்த அஸ்திரத்தின் மகத்துவத்தால் கிருதயுகத்தில் பரசுராமரும் திரேதாயுகத்தில் பிர்மத்தின் அம்சமான ஸ்ரீ ராமபிரானும் ராவணன் இந்திரஜித்து முதலிய ராக்ஷஸர்களும துவாபரயுகத்தில் பாரத்வாஜ வம்சத்திலுதித்த துரோணசாரியரும் அச்வத்தாமா

அர்ஜுனன் இவர்களும் விசேஷப் பிரசித்தியை அடைந்திருக்கிறார்கள் என்று புராணங்களால் நன்கு விளங்குகிறது.

பெருத்த அபராதியான காகாஸுரன்பேரில் துரும்பைபிரம்மாஸ்திரமந்த்ரத்துடன் பிரயோகித்து மூவுலகங்களிலும் தொடர்ந்துதன்னை ஹிம்ஸித்துக் காப்பாற்றுவாரில்லாமல் ஸ்ரீ ராமனையே சரணமாக அடைந்ததும் மஹா வரப்பிரஸாதியான ராவணன் கடைசியில் இதே பிர்ம்மாஸ்திரத்தால் மரணத்தை அடைந்ததும் நவவியாகரணங்களுக்கு அதிபதியான வாயுபுத்திரன் இந்திரஜித்தால் தன்பேரில் பிரயோகிக்கப்பட்ட பிர்மாஸ்திரத்திற்கு முகூர்த்தகாலம் கட்டுப்பட்டிருந்ததும் ஸ்ரீராமன் வானர சேனைகள் உள்பட கட்டுண்டதையும் பற்றி ஸ்ரீமத்ராமாயணத்தில் வால்மீகி ரிஷி விவரமாய்க் கூறியிருக்கிறார். இவ்வளவு மஹிமை பொருந்திய காயத்திரீ மஹாமந்த்ர ஜபமானது பிராமணர்களின் முக்கிய கர்மாவாகிய ஸந்தியாவந்தனத்திலும் மாத்தியான்ஹிக காலத்திலும் செய்யப்படும் ஜபமாக உபயோகிக்கப்படுகிறது. இந்த காயத்திரீ மந்திரத்தின் முக்கிய தேவதையானது காலையில்

प्रातर्ध्यायामि गायत्रीं रविमण्डलमध्यगाम् ।
ऋग्वेदमुच्चारयन्तीं रक्तवर्णां कुमारिकाम् ॥
अक्षमालाकरां ब्रह्मदैवत्यां हंसवाहनाम् ।

𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑌿 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀𑌂 𑌰𑌵𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌧𑍍𑌯𑌗𑌾𑌮𑍍 ।
𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌮𑍁𑌚𑍍𑌚𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑍀𑌂 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌾𑌂 𑌕𑍁𑌮𑌾𑌰𑌿𑌕𑌾𑌮𑍍 ।
𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌕𑌰𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑌾𑌂 𑌹𑌂𑌸𑌵𑌾𑌹𑌨𑌾𑌮𑍍 ।

உதயகாலத்தில் ஹம்ஸவாஹனத்தில் வீற்றிருந்து எட்டு வயது உள்ளவளாயும், சிவப்பு வர்ணத்துடன ஜபமாலையைக் கையில் வைத்துக்கொண்டு ரிக்வேதத்தைப் பாராயணம் செய்துகொண்டிருக்கும் காயத்திரிஎன்றுபெயருள்ளவளாயும் நடுப்பகல்வேளையில்

मध्यं दिनेतु सावित्रीं रविमण्डलमध्यगाम् ।
यजुर्वेदं व्याहरन्तीं श्वेतां शूलकरां शिवाम् ॥
युवतीं रुद्रदैवत्यां ध्यायामि वृषवाहनाम् ।

𑌮𑌧𑍍𑌯𑌂𑌦𑌿𑌨𑍇𑌤𑍁 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀𑌂 𑌰𑌵𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌧𑍍𑌯𑌗𑌾𑌮𑍍 ।
𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌂 𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑍀𑌂 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌂 𑌶𑍂𑌲𑌕𑌰𑌾𑌂 𑌶𑌿𑌵𑌾𑌮𑍍 ।
𑌯𑍁𑌵𑌤𑍀𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑌿 𑌵𑍃𑌷𑌵𑌾𑌹𑌨𑌾𑌮𑍍 ।

ரிஷபாரூடையாய் சூல ஹஸ்தத்துடன் பால்ய வயதுள்ளவும் வெளுப்பு வர்ணமுள்ளவளாயும் யஜுர்வேதத்தை உச்சரித்துக் கொண்டு ருத்திரஸ்வரூபியான ஸாவித்திரீ என்னும் பெயருள்ள வளாயும், ஸாயங்காலத்தில்,

सायं सरस्वतीं श्यामां रविमण्डलमध्यगाम् ।
सामवेदं व्याहरन्तीं चक्रायुधधरां शुभाम् ॥
ध्यायामि विष्णुदेवत्यां वृद्धां गरुडवाहनाम् ।

𑌸𑌾𑌯𑌂 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌂 𑌶𑍍𑌯𑌾𑌮𑌾𑌂 𑌰𑌵𑌿𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌧𑍍𑌯𑌗𑌾𑌮𑍍 ।
𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌂 𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑌨𑍍𑌤𑍀𑌂 𑌚𑌕𑍍𑌰𑌾𑌯𑍁𑌧𑌧𑌰𑌾𑌂 𑌶𑍁𑌭𑌾𑌮𑍍 ॥
𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌦𑍇𑌵𑌤𑍍𑌯𑌾𑌂 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌂 𑌗𑌰𑍁𑌡𑌵𑌾𑌹𑌨𑌾𑌮𑍍 ।

பக்ஷிராஜனை வாஹனமாயுடையவளும் சக்கிராயுதத்தைத் தரித்துக்கொண்டு வயதுசென்றவளும் கருப்புவர்ணத்துடன் ஸாம வேதபாராயணம் செய்துகொண்டுவரும் விஷ்ணுதேவதையான ஸரஸ்வதீ தேவி என்னும் பெயருடனும் சூரியமண்டலத்தின் நடுவில் பிரகாசிக்கும் காயத்ரி தேவதையைத் தியானம்பண்ணுகிறேன் என்றும் த்ரிமூர்த்திஸ்வரூபமாய்ப் பிரகாசித்துக்கொண்டு வருகிறது

अंगुल्यग्रेणयज्जप्तं यज्जप्तं पर्वलङ्घनैः ।
व्यग्रचित्तेन यज्जप्तं त्रिविधं निष्फलं भवेत् ॥

𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌗𑍍𑌰𑍇𑌣 𑌯𑌜𑍍𑌜𑌪𑍍𑌤𑌂 𑌯𑌜𑍍𑌜𑌪𑍍𑌤𑌂 𑌪𑌰𑍍𑌵𑌲𑌙𑍍𑌘𑌨𑍈𑌃 ।
𑌵𑍍𑌯𑌗𑍍𑌰𑌚𑌿𑌤𑍍𑌤𑍇𑌨 𑌯𑌜𑍍𑌜𑌪𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

விரல்நுனியால் ஜபிக்கப்பட்டதும், விரல்களின்கணுக்கள் தாண்டி எண்ணி ஜபிக்கப்பட்டதும், பலவித வேறு எண்ணங்களுடன் ஜபிக்கும் ஜபமும் பிரயோஜனமற்றது என்று இதன் கருத்து. ஆனதால் அப்படிச்செய்யாமல் உறுதியுடனும் நியமத்துடனும் இம்மந்திரத்தை ஜபிக்கும் த்விஜன்மர்களுக்கு இந்த லோகத்தில் அரோக த்ருடகாத்திரத்தையும் மனஸ்துஷ்டியையும்கொடுத்துப் பரலோகத்தில் மோக்ஷத்தையும் அவசியம் அளிக்கும் என்று திருடமான நம்பிக்கைகொள்ளும்படி ஆசாரியாள் அடிக்கடி உபதேசிக்கிறார்கள். இது பிராம்மணர்களுக்கு முக்கியமான கடமை. பிரதிதினமும் ஜபிக்கும் காயத்திரியின் எண்ணிக்கையானது அவர

வர்களின் காலதேசத்தை அனுசரித்து அனுஷ்டிக்கக்கூடியது அந்தந்தமதாசாரியாள் செய்து அனுக்கிரகித்திருக்கும் ஆன்னிக கிரந்தங்களில் விவரமாய்காணப்படுவதை ஆசாரியாளிடம் உபதேசிக்கப்பெற்று, விடாமல் எப்பொழுதும் அனுஷ்டித்தால் க்ஷேமத்தை அடைவார்கள் என்பது நிச்சயம் ஆசமனீயம். பிராணுயாமம். பிர்ம்மவித்தியாகாயத்திரீ மஹாமந்திரஜபம் ஆகியபிரஸித்தியான இம்மூன்றுவிஷயங்களும் ஸந்தியாவந்தனததின் முக்கியமான அம்சங்களேயாகும் ஒவ்வொன்றிலும் அபரிமிதமான் விசேஷகுணங்களிருப்பதால்இந்தக்காலத்திற்கேற்றவாறுபிராமணர்கள் இதையாவது அனுஷ்டித்தால் போறுமென்று ஜகத்குரு. ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் விஜயம் செய்யும் இடங்கள்தோறும். சிஷ்யாளுக்கும். இதராளுக்கும் உபதேசம் செய்துவருகிறுர்கள் இப்படிப்பட்டஆசாரியாள் கிடைப்பதரிது. என் புத்திக்கெட்டியவாறுஎழுதியிருப்பதை ஆஸ்திகர்களான ஸகலப் பிராமணர்களும் வெறுப்பின்றி பாராமர்சித்துத் திருப்தியுடன் அவரவர்களும் அனுஷ்டிப்பதோடு சிறுவர்களேயும் அனுஷ்டிக்கும்படி செய்வார்கள் என்று நம்புகிறேன். இந்த ஸந்தியாவந்தன கர்மாவில் இவ்வளவு விசேஷமிருப்பதைக் கவனித்து வாசிக்கும் ஸகல பிராமணவித்தியார்த்திகளும் கட்டாயம் சிரத்தையுடன் செய்துவருவார்கள் என்றும் நம்புகிறேன். இத்துடன் ஸந்தியாவந்தன விமரிசம் என்னும் வியாஸத்தை முடித்துக்கொள்ளுகிறேன்.

தி. ந. தாததேசிகாசாரியார்,
கம்மாபுரம்.

---

# தீண்டாமைக்கு முடிவுகாலம்.

(472-வது பக்கத்தொடர்ச்சி)

மற்று முற்காலத்தில் மகாபாதகம் செய்துவிட்டானேயானல் அவனுக்குப் பிராயச்சித்தம் உண்டென்றேற்பட்டிருந்தது. அது இப்போது வேண்டாமென்கிறுர். அதாவது தர்மசாஸ்திரங்களில் சில பாபச் செய்கைகளே மகாபாதகமெனக் கருதுகின்றனர். அத்தகைய மகாபாதகம் செய்தவனுக்குப் பிராயச்சித்தம் வேண்டாமென்றுர். இதனல் இவன் கோஷ்டியிலிருந்து விலக்க

தக்கவன் தான். இப்போதைய கருணாமூர்த்திகள் இந்த வார்த்தையைக் கேட்டுவிட்டால் சாஸ்திரத்தையே தீவைத்துக் கொளுத்திவிடவேண்டுமென்பார்கள். ஏன்? கருணைவெள்ளம் அவ்விதம் கரைபுரண்டு ஓடுவதுதான் காரணம். இவ்விதம் ஒவ்வொருவனாக விரட்டப்பட்டால் நம்முடைய சமூகம் குழைந்துபோம். பிறகு நம்மதமே போய்விடுமே என்ற அனுதாபம்தான். ஆனால் நம் மகரிஷிகளுக்கு அனுதாபமில்லையோ வென்றால் என்னென்று சொல்வது சொல்கிறேன் மகரிஷிகளுக்கும் அனுதாபம் உண்டு. அவர்கள் அனுதாபம்தான் மேலானது. பாருங்கள். இம்மஹா பாதகிகளுக்கு முக்கியமான பிராயச்சித்தம் மரண தண்டனை தான். இந்தத் தண்டனையை நம் கருணாவான்கள் காதில் கேட்பார்களா. அதைக்காட்டிலும்வேறு வழியில் பார்த்தால் 10-12 வருடங்கள் ஆஹாரங்களைப் பலவாறு சுருக்கி தேகத்தை வற்றடித்து தேசாடனம் முதலியனசெய்தலும் தீர்த்த ஸ்நானங்களும் விதிக்கப்பட்டிருக்கும். இதைவற்றுக் கொள்வார்களா? இன்னும் ஸாமான்யமாய்க்கூறுங்கள்சற்று தயவுகாட்டக்கூடாதாவென்றால் மிகவும்தயவுகாட்ட வேண்டியதுதான். யாது செய்யமுடியும். சாமான்யமாய்தேகத்தில் சிறிய புண் உண்டானால் பிளாஸ்திரி முதலானது சுலபமாய்ப் போட்டு ஆற்றிவிடுவதுண்டு. பிளவை உண்டாய் விட்டால் டாக்டரிடம் கெஞ்சிக்கூத்தாடி ஐயா லேசானபிளாஸ்திரி போட்டு ஆற்றவழிபாருங்கள். ஏதோ இவனைப் வரவழைத்துக்கொண்டதல்ல. கடோரமாய்ச்செய்யாதீர்களென்றால் டாக்டருக்கும் அது சம்மதம்தான். நோயாளிக்கு மயக்கத்திற்கும் மருந்துகொடுத்து மயக்கிக்கையைக்காலைக்கட்டி அறுத்துத்தான் தள்ளவேண்டுமென்ற ஹடமல்ல. ஆனால் ரணத்தின் ஸ்வரூபம் தெரிந்தவன் கருணையை அச்சமயம் கடலிலெறிந்துவிட்டுக் கூர்மையான ஆயுதங்களால் பழங்கள் அறுப்பது போல் அறுக்கத்தான் செய்வான். அதனால் அவனுக்கு ஸௌகம் ஏற்படலாம். அல்லது மரணமும் நேரலாம். அப்போது நாம் டாக்டரை நிந்தனை செய்யமாட்டோம். அதுபோல் உண்மையான கருணைக் கடல்களான நம்முன்னோர்கள் தீரயோசனை செய்து மரணாந்தப் பிராயச்சித்தமும் வேண்டாம். அதற்கடுத்தபடியும் மரணத்திலேயே முடியுமென்றெண்ணி அவனுக்குப்பிராயச்சித்தம் வேண்டாமென்று விலக்கி விடுவதே நலமென்றெழுதிவைத்தார். இதை

கவனிக்கும் ஆஸ்திகன் மஹாபாதகத்தைச் செய்யத் துணியமாட்டானென்பதே கருத்து. ஆகவே இவவிதம் கூறியது ஸரி.

மற்று அதிதிகள் பிதிருதினம் இவைகளில் மாம்ஸம் சேர்ப்பதென்றிருந்தது இப்போது கூடாதென்று தடுக்கிறூர்.

தன் ஜாதியாய் இருந்து பதிதனுகி அவன் பிராயச்சித்தம் செய்துகொண்டபோதிலும் அவனுடன் சேர்ந்திருப்பது கூடாதென்கிறூர். இதனுல் இவ்விதப் பிராயச்சித்தம் செய்த பிறகு முன் சேர்ந்திருந்தார்கள், இப்போது தடுக்கப்படுகிறது. ஆனுல் இவ்விதம் பிராயச்சித்தம் எதற்காகச் செய்துகொள்ள வேணுமென்றூல் பிராயச்சித்தம் வேண்டியதே. அதனுல் பிறர்களோடு சேராமல் தனியாய் இருக்கநேரிடினும் தனது கர்மாநுஷ்டானம் செய்துகொள்ளமட்டிலும் சுத்தி பெறுகிறூன். அதனுல் அச் சன்மாவைக் கழித்தால் உத்தமகதியுண்டென்பது கருத்து.

தாஸன் கோரக்ஷணம் செய்பவன் குலபரம்பரையாய் ஸ்நேகமாய் வருபவன் ஆகிய சூத்திரர்களிடத்தில் அன்னம் கிரகித்துச் சாப்பிடல் கூடாதென்கிறூர்' முன் யுகத்தில் ஏதோ சில சூத்திரர்கள் கிருஹத்தில் கார்யவசத்தால் பிராமணர்கள் புசித்தார்களென்று இதனுல் வெளியாகிறது. ஆனுல் இது அவ்வளவு பிரஸித்தமாய் ஸ்மிருதிகளிலிருந்து வெளியாகவில்லை. அவ்விதம் ஏதோ இரண்டொன்று அபூர்வமாகவே அக்காலத்திலும் நடந்திருப்பதாய்த் தான் ஏற்றுக் கொள்ளலாம். ஏனெனில் க்ஷத்திரியன் வைச்யன் வீட்டிலேயே ஏதோ கார்யவசத்தால் பிராமணர்கள் புசித்ததாயும் அவர்கள் சுத்தமாய் இருந்தால்தான் என்றும்

क्षत्रियश्चापि वैश्यश्च क्रियावन्तौ शुचिव्रतौ ।
तद्गेहेषु द्विजैर्भोज्यं हव्यकव्येषु नित्यशः ॥

க்ஷத்ரியஶ்சாபி வைஶ்யஶ்ச க்ரியாவந்தௌ ஶுசிவ்ரதௌ ।
தத்கேஹேஷு த்விஜைர்போஜ்யம் ஹவ்யகவ்யேஷு நித்யஶ: ॥

என்ற சுலோகத்தால் வெளியிடுகிறூன். ஆகவே சூத்திர கிருஹ போஜனம் அக்காலத்தில் ஸாமான்யப் பிராமணனே சாப்பிட்டிருக்கவேண்டும். அவ்விதம் செய்வதும் கூடாதென்று இப்போது தடுக்கிறூர்.

கிருகஸ்தன் தூரதேச தீர்த்தாடனம் செய்யக் கூடாதென்கிறார். தீர்த்தயாத்திரையில் விசேஷ பலன் உண்டென்று முற்காலத்தில் சிசுக்களுடன் பெரிய குடும்பஸ்தன் போவது வழக்கம் அது இக்காலத்தில் வேண்டாமென்கிறார். ஆதல்பற்றியே இக்காலத்தில் ஸம்ஸாரியான கிருஹஸ்தன் வெளியேறுகிறதில்லை.

कुटुम्बिनो विनान्येषां दृष्टं तीर्थादि सेवनम् ।
कुटुम्बिनां गृहे सर्वं विकलोनिर्गतोगृहात् ॥

குடும்பிநோ விநாந்யேஷாம் த்ருஷ்டம் தீர்த்தாதி ஸேவநம்।
குடும்பிநாம் க்ருஹே ஸர்வம் விகலோநிர்கதோக்ருஹாத்॥

குடும்பிகளைத் தவிர மற்றவர்களுக்குத்தான் தீர்த்த ஸேவை முதலியன உண்டு. குடும்பிகளுக்கு எல்லாம் வீட்டிலேயே தான். அத் தகையோன் போனால் பலனே கிடையாதென்றே ஸ்மிருதிகாரர் சொல்கிறார்.

சிஷ்யன் குருவினிடத்தில் சிச்ரூஷை முதலியவை செய்வது போல் குருபத்நியினிடத்தும் நடந்து வந்தான். அவ்விதம் குருபத்நியினிடத்திலிருக்க வேண்டாமென்று தடுக்கிறது.
பிராமணனுக்கு ஆபத் விருத்தியென்றும் நாளைக்கென்று பதார்த்தம் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் இருந்தது இவ்விரண்டும் கூடாதென்கிறார். இதனால் ஆபத்விருத்தியென்று எதைக் கூறுகின்றதோ அதை அனுஷ்டிக்கக் கூடாது. ஆயுள் மட்டிற்கும் வேண்டியளவு பொருள் சேகரித்து வைத்துக்கொள்ளலாமென்று ஏற்பட்டது. தேசாந்தர ஸஞ்சாரமே பிராமணன் செய்வதென்பதும் கூடாதென்கிறார். வாயால் வைதிகாக்னியை ஊதல்கூடதாம்.

பலாத்காரத்தால் கற்பழிந்த ஸ்திரீயை மறுபடி பிராயச்சித்தத்தால் சேர்த்துக் கொள்ளல் கூடாதென்கிறார். யதிகள் எல்லா வருணத்தாரிடத்தும் பிக்ஷை எடுத்தல் கூடாதென்கிறார். புதிதான ஜலத்தில் 10நாட்களுள் முழுகுதலாகாதாம். குருகேழ்கும் தக்ஷிணையைக் கொடுக்க வேண்டாமாம். அதாவது முன்காலத்தில் வித்தைகற்று முடிந்ததும் குருவானவர்தன் இஷ்டப்படி தக்ஷிணை கேட்பார். அக்காலத்தில் வித்யாபலத்தால் சிடன் அதைக்கொண்டுவந்து சேர்ப்பான். இக்காலவியல்பு அதற்கேற்றுவராதென்று கண்டு அவ்விதம் குரு விரும்பும் தக்ஷிணையைக் கொடுக்க வேண்டுமென்ற வரம்பு வேண்டாமென்கிறார்.

பிராமணர்களிடத்தில் சூத்திரன் சமயல் முற்காலத்திலிருந்ததாம். அது கூடாதென்றார். கிழவர்கள் மலையின்பேரில் ஏறி உருண்டு தியானத்துடன் உயிரிழப்பது அக்னியில் குதிப்பது இதுமுன் நடந்தது. இது கூடாதென்கிறார். குன்றேறிக்குதித்தல் ஓர் பிராயச்சித்தமென்று அக்காலத்தில் நினைத்தனர். தீராத வியாதியுள்ளவர்கள் ஸர்வஸ்வாம் என்ற யாகத்தில் அக்னியில் குதித்தார்களாம். ஆனால் ஸ்ரீராமரது ஸன்னிதியில் சரபங்கமகரிஷி ஒரு வியாதியாலும் குதிக்கவில்லை. ராமதரிசனத்திற்கு வெகுகாலம் காத்திருந்து இந்திரன் நேரில் வந்தழைத்ததிலும் அவனை லட்சியம்செய்யாது தள்ளிவிட்டு ராமனைத்தரிசித்து அக்னியில் குதித்தார் என்று அவரது மகிமை ராமாயணத்தில் மிகவும் காணக்கிடக்கிறது.

இனி பசுக்கள் குடித்தஜலத்தில் சிஷ்டர்கள் ஆசமனம் செய்யலாமென்றிருந்ததாம். அது இக்கலிக்கு வேண்டாமென்கிறார். இதைப்பற்றி நாம் அதிகம் விசாரிக்கத் தேவையில்லை இப்போது ஆசமனம் என்ற கன்மாவையே விட்டுவிட்டதால் எந்த தீர்த்தத்தில் செய்யலாம. எதில் செய்யக்கூடாதென்ற சிரமம் வேண்டாம்.

அடுத்து தகப்பனுக்கும் புத்திரனுக்கும் ஏற்படும் விரோதத்தில் சாக்ஷிசொல்ல முன்வருபவனுக்கு தண்டனை உண்டென்று இருந்தது. இங்கு விசாரிக்கவேண்டியது இது. முற்காலத்தில் தகப்பனும் புத்திரனும் வியவகாரம் செய்துகொள்ளமாட்டார்கள். தகப்பனது நியாயவிரோதமான காரியத்திலும் புத்திரன் தலையிடமாட்டான். ஒருசமயம் இருவரும் தவறிவிட்டாலும் இருவர்களுமே பச்சாத்தாபத்தோடு பிராயச்சித்தம் செய்துகொண்டு நியாயமார்க்கத்திற்கு வந்துவிடுவார்கள். இக்கார்யத்தில் மூன்றாவது நபர் தலையிடுவது நியாயமே இல்லை. வாஜஸ்ரவஸர் என்பவர் ஓர் யாகத்தில் பால்வற்றிக்கன்றுபோட சக்தியற்று இரையெடுக்கக்கூடப்பல்லில்லாத மாடுகளை தானம் செய்ய ஆரம்பித்தார். அதை அவரது புத்திரன் நசிகேதஸ் என்பவர் பார்த்துக்கொண்டே இருந்தார். இவ்விதம் தானம் செய்வது மகாபாபம். மகாபாபநரகம்தான் இதன் பலனாகக் கிடைக்குமென்பதை அறிந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு வருத்தத்தை அடக்கமுடியாமல் ஸர்வக்ஞனான தகப்பனுக்கு இது பாபபலனைக் கொடுக்குமென்று வெளியாய்ச் சொல்வது நியாயமில்லையென்று அப்பா என்னை

யாருக்குக் கொடுக்கப்போகிறீர்கள். என்று வற்புறுத்த ஆரம்பித்தான். தகப்பனுக்கு அச்சமயம் ஏறியிருந்த தமோகுணம் நீங்காமையால் கோபம் மிகுந்து குழந்தையென்றறியாமல் உன்னை யமனுக்குக் கொடுக்கிறேனென்றார். பிதாவின் கட்டளையை மீறுவது அநீதி என்று அப்படியே யமலோகம் சென்றான். பிறகு அதன் மூலம் அநேக கார்யத்தை சாதித்ததில் முக்கியமாய் முதலாய் யமனிடத்தில் என் தகப்பன் என் பேரில் கோபம் கொள்ளாமலிருக்க வேண்டுமென்றே முதல் வரம் வாங்கினான். இங்கு அழகை கவனியுங்கள். தகப்பன் செய்வது அக்கிரமம். புத்திரன் சொன்னது ஸரி. இதில் தகப்பன் யமனுக்குக் கொடுக்கிறேனென்று சொன்னது தவறுதல் என்று அச்சமயம் மூன்றாவது மனிதன் சொல்ல முன்வந்தால் என்ன நேரும். தமோகுணம் மேலிட்டால் இன்னும் விபரீதம் விளையலாம். ஆதல்பற்றி அவ்விஷயத்தில் எவனாவது முன்வந்தால் அந்த சாக்ஷிக்குத்தண்டனை விதிப்பது அக்காலத்தில் ஒத்திருந்தது. இக்காலத்திலோ पुत्राः पितृद्वेषिणः வுத்ராஃ பித்ருத்வெஷிணஃ பிள்ளைகள் தகப்பனுக்குத்துரோகம் செய்கிறவர்களென்று கலிமகிமையில் அடிக்கடி கூறப்படுவதால் சகஜமான இவர்களின் விரோதத்தில் சாக்ஷி சொல்லவராலாமென்று உத்தரவு கொடுக்கிறது.

அடுத்து யதி இரவில் கிருகஸ்தனுடைய வீட்டில் தங்கலாம் என்றிருந்தது. அது இப்போது தடுக்கப்படுகிறது. முற்காலத்திலும் கிருகத்திலிருக்கலாமென்று விதியே இல்லை. அவர்கள் படம் தேவாலயம் புற்று நதிதீரம் மரத்தடி இவைகளிலேயேதான் வசிக்கவேண்டுமென்றும் 1 மணிக்குமேல் பகலில் பிக்ஷைக்காகக் கிராமத்தில் புகவேண்டுமென்றும் விதி. அவ்விதமாயினும் தள்ளாமையாலோ சரீரத்தின் வியாதியாலோ வீட்டில் வாஸத்திற்கு வந்தால் அக்னிஹோத்திரசாலையில் வசிக்கச்செய்யலாமென்று ஓர் வழி இருக்கிறது. அதுவும் இக்காலத்தில் வேண்டாமென்றார். இது ஒருவிதத்தில் நியாயமே. இக்காலத்தில் அக்னிஹோத்ரமே இல்லாததால் அவர்களும் வசிக்கவேண்டாமென்பதே. ஆக இவ்வளவு கார்யங்கள் நம் முன்னோர்களான ஞானிகள் நன்கு ஆலோசித்து மிக வியவஸ்தையுடன் நிஷேதம்செய்து தர்மத்தை நிலைநாட்டினர்.

ஆஸ்திக சிகாமணிகளே! நாம் இந்த நிஷேதங்களை நன்கு

ஆலோஜித்து இதன்படி நடப்பதால் நமக்கு கிருதயுகத்தில் மனிதர்களடைந்த மேன்மையை அடையமாட்டோமா? தேகம் தபஸ் முதலியவைகளின் பலத்தை நன்கறிந்தே இவ்விதம் இறக்கி நம்மை யனுக்கிரஹித்தார்களேயொழிய பலனும் குறையுமென்று சொல்லவில்லை. ஆகையால் சமுத்திரயானம் போகலாமா. பிரௌடாவிவாகம் செய்யலாமா? எல்லா ஜாதியும் ஒன்றாகலாமா? நாம் ஒருவிதக் கட்டுப்பாடின்றி மனம் போனபடியலையலாமா? என்று எல்லாம் வீண்வாதம் செய்துகொண்டு இதற்கு சாஸ்திரம் ஒன்றும் கூறவில்லையென்றும் சாஸ்திரம் கூறுகிறதென்றும் மதம்கொண்டு, பலிஷ்டன் உலகில் அரசனென்றபடி பேசி வீண்காலத்தை ஏன் கழிக்கவேண்டும். ஆஸ்திக ஸந்ததியிற் பிறந்திருக்கிறோமென்று நினைவுள்ளவர்களாவது இதிற்தலையிடாமல் சாஸ்திரமார்க்கத்தில் கூடியமட்டும் நடந்து நமது ஸந்ததியையும் அவ்விதம் நடத்துவோம். இனி இவ்விஷயத்தை இத்துடன் நிறுத்திக்கொண்டு நம் தர்மசாஸ்திரம் நமக்குக் கன்மாவை எவ்விதம் விதிக்கும்படி ஆக்ஞாபிக்கிறது. எந்த எந்தக்காலத்தில் எதைதைச் செய்யலாம் என்ற விசாரத்திலிறங்கினல் அறிந்தமட்டிற்குப் பலன் கிடைப்பது நிச்சயமாதலால் அதிலிறங்குவாம். (தொடரும்)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

## உபாகர்மாவில் ஆசார்ய பக்தி

(நெரிஞ்சிப்பேட்டை.)

தற்காலம் நம்மால் அனுஷ்டிக்கப்படவேண்டிய கர்மாக்கள் அனேகமிருப்பினும் இவ்வுபாகர்மாவானது பலராலும் மிகுதியான சிரத்தையுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

नबुद्धिभेदं जनये दज्ञानां कर्मसङ्गिनाम् ।

ந வுத்திபேதம் ஜநயேதஜ்ஞாநாம் கர்மஸங்கிநாம் ।

என்ற கீதாவசனப்படி கர்மாவில் சொல்லப்பட்ட அக்ஞர்களின் புத்தியை பேதிக்கக் கூடாதென்பது பண்டிதர்களின் கடமையாயிருந்தும் கர்மாக்களைச் செய்யவேண்டிய காலத்தில்சந்தேகமுண்டாகுமேயானல் பூர்வபக்ஷ ஸித்தாந்த ரூபமாக அதுதான் கால

மென்றும் இதுதான் காலமென்றும் சொல்லவேண்டி வருகிறது. அப்பொழுதுஇதுதான் ஸித்தாந்தமென்பதைத்தெரிந்துகொள்ள முடியாமல் அக்ஞர்கள் தத்தளிக்க வேண்டியிருக்கிறது. இன்றைய தினம் பத்திரிகையில் பார்த்தால் ஸ்ருதியான ப்ரமாண வசனங்களுடன் ஆஷாடத்தில் உபாகர்மா செய்யவேண்டுமென்று இருக்கிறது. மருநாள் பத்திரிகையில் சிராவணத்தில் என்றும் அடுத்த நாள் பாத்ரபதத்திலென்றும் இருக்கிறது. தெரிந்தவர்கள் மார்க்கமே இவ்விதமிருக்கும்போது தெரியாதவர்கள் என்ன செய்வார்கள்?

இப்படிச் சிலவருஷங்களாக உபாகர்மாவில் பேதங்கள் ஏற்பட்டுக்கொண்டே வருகின்றன. இருந்தாலும் இவ்வருஷம் பேதமேற்படக் காரணமில்லையென்று நினைத்திருந்தும் ஆடி-மீ 28௳ யென்றும், 29௳ யென்றும் கக்ஷிகள் ஏற்பட்டுவிட்டன. இதைப் பார்த்து ஸந்தேகப்பட்டுக்கொண்டிருந்த ஸமயத்தில் நமதாசார்ய பீடத்திற்கே திலகம்போல் நமது ஆதிசங்கரபகவத்பாதாசார்யாளே லோகக்ஷேமார்த்தம் தர்மஸ்தாபனத்தின்பொருட்டு மருமுறை அவதரித்தார் என்று நிச்சயிக்கக்கூடிய நிலைமையில் விளங்கிவருகிற அபாரகருணாநிதிகளான ஸ்ரீ மஹாஸன்னிதானத்தில் நிர்ணயிக்கப்பட்டு ஸ்ரீமடம் ஆஸ்தானவித்வான் T. V. லக்ஷ்மீநாராயண சாஸ்திரிகளால் அனுப்பப்பட்ட பத்திரிகையைப் பார்த்ததும் சூரியனைக்கண்ட பனிபோல் ஸகல ஜனங்களுடைய ஸந்தேஹமும் விலகி ஐகமத்யம் ஏற்பட்டது.

(தொடரும்)

என். கே. வெங்கட்டரமண சாஸ்திரிகள்.

---

ராவ்பகதூர் எஸ் அப்புசாஸ்திரிகள் அவர்களின்

## 72-வது ஆண்டுவிழா.

8—8—27 திங்கட்கிழமையன்று கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர், மானேஜர், புரோப்ரைட்டர், குலபதி, வித்யாப்ரசாரணப்ரவீண ராவ்பகதூர் முதலிய பிருதுகள் பூண்டவருமான ஸ்ரீமான் எஸ். அப்புசாஸ்திரிகள் அவர்களது 72-வது ஆண்டு பூர்த்தி இனிது நடந்தேறியது. அன்று அவ்வாண்டு

விழாவிற்காக ஷை ஸ்கூல் விடுமுறையாக பாவிக்கப்பட்டது. காலையில் விசேஷமாக எல்லா ஆலயங்களிலும் அபிஷேகம் அர்ச்சனை முதலியவைகள் நடந்தன. அன்று நகரிலுள்ள விசேஷமான கனவான்களும், ஆசிரியர்களும், மாணவர், பழைய மாணவர்களும் திறள்திறளாக அவரவர்களுக்குத் தக்கவாறு பேட்டி சாமான்களுடன் வந்திருந்தார்கள். ஷை சாஸ்திரியாரவர்கள் வந்தவர்களுக்குத்தகுந்தபடி ஆசிகூறி சந்தனம் தாம்பூலம்முதலியவைகளை அளித்தனர். சிலரிடமிருந்து ஸந்தோஷ அனுதாபக் கடிதங்கள் வந்தன.

ஆஸ்திகாபிமானி தானத்திற்குள் வித்யாதானமே சிறந்ததென்று 1876-ம் வருஷமுதல் ஷை கல்விச்சாலையைத் தனிமையாய் யேற்றுக்கொண்டு பிறருதவியை எதிர்பாராமலும் கவர்ன்மெண்டு உத்யோகங்களை யேற்றுக்கொள்ளாமல் வித்யாசாலையை ஸ்தாபித்தும் அதில் பயின்ற மாணவர்கள் B. L. பரீக்ஷைகளில் தேறி சிலர் நியாயவாதிகளாகவும் முன்ஸீப் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் ஸப்ஜட்ஜ் ஹைகோர்ட்ஜட்ஜ் முதலிய உத்யோகங்களையும் பலர் L T. பட்டபரீக்ஷையில் தேர்ச்சியடைந்துஉயர்தரமான வேலைகளையும் அடையும்படியாய் செய்கின்றூர்என்பதை "குலபதி"என்னும் பட்டமானது நமக்கு ஞாபகத்தை உண்டுபண்ணுகிறது. சாஸ்திரியாரவர்கள் ஆஸ்திகாபிமானீ என்பதையும்பிறவிக்கடமையைப் போக்கப் போதுமான திறமைவாய்ந்த அத்வைத ஸபைகளில் காரியதரிசி முதலிய பதவியை எற்றுக்கொண்டு விருத்திசெய்து வருவதையும் ஸத்விஷயங்களில் திரவ்யவிரயம் முதலியவைகளையும் "வித்யாப்ரசாரணப்ரவீணர்" என்ற பட்டம் ஞாபகப்படுத்துகின்றது. ஷை பட்டம் லோககுரு ஸ்ரீ ஆசாரியாளவர்களால் கொடுக்கப்பட்டது இங்கு குறிக்கத் தகுந்ததே.

உயர்ந்த வர்ணத்திலும் உயர்ந்த வம்சத்திலுமுதித்த ஷை சாஸ்திரியார் அவர்கள் லோககுரு அனுக்ரஹத்தாலும் ஈசனுடைய திருவருளாலும் ஆரோகதிருடகாத்திரராய் நெடுநாள் வாழ்ந்து இன்னும் கலாசாலையை விருத்திசெய்தும் மாணவர்களுக்கு உத்ஸாகமுண்டுபண்ணவேண்டுமென நாம் கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

A Ramamoorthy.